

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் சேலத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித் தொகை வேண்டி கோரிக்கை மனு அளித்த சேலம் மேற்கு வட்டம், மல்லமூப்பம்பட்டி மூலக்கடை பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி திருமதி ராஜேஸ்வரியின் மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதன் அடிப்படையில், அவரது கோரிக்கைக்கு தீர்வு காணப்பட்டு நேற்று முன்தினம் (12.6.2023) சேலம் விமான நிலையத்தில், மாற்றுத்திறனாளி திருமதி ராஜேஸ்வரி அவர்களுக்கு கடும் உடல் ஊனமுற்றோருக்கான மாதாந்திர உதவித்தொகையான ரூ.2000/– இம்மாதம் முதல் வழங்குவதற்கான ஆணையினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். உடன் முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருக்கோயிலூர் நகரம் மற்றும் திருக்கோயிலூர் கிழக்கு ஒன்றியம் திமுக சார்பில் நகர மன்றத் தலைவரும், மாவட்ட துணைச் செயலாளருமான டி.என்.முருகன் மற்றும் மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் மு. தங்கம், ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி. செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள், ஜி இரவிச்சந்திரன், அ.சா.ஏபி. பிரபு, பி.வி.ஆர். விசுவநாதன், பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ். அன்பு, நகர மன்றத் துணைத் தலைவர் உமா மகேஸ்வரி குணா, பொதுக்குழு உறுப்பினர் பத்தவச்சலம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் இராஜிவ்காந்தி, தொண்டர் அணி வெங்கட், இளைஞர் அணி நவநீதகிருஷ்ணன், தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் ப. அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# நாகை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, ஜூன் 14 -

நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ள உள்ள நிகழ்ச்சிக்காக காடம்பாடியில் உள்ள இ.ஜி.எஸ். பிள்ளை கல்லூரி வளாகத் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழாவிற்காக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் உள்ள கலைஞர் அரங்கத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் நாளை (15.6.2023 வியாழக் கிழமை) காலை 10.00 மணிக்கு நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து



கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:-

1.கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக மூத்த முன்னோடி களுக்கு பொற்கிழி விருது வழங்கும் நிகழ்ச்சிக்காக நாகை மாவட்டத்திற்கு வருகை குறித்து.

2. தற்போது நடைபெற்று வரும் உறுப்பினர் சேர்த்தலை மேலும் தீவிரப் படுத்துதல் குறித்து,

3.கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஞான. இமையநாதன் ஏற்பாட்டில்! மயிலாடுதுறை மத்திய ஒன்றியத்தில்

# அ.தி.மு.க.வினர் 800 பேர் கழகத்தில் இணைந்தனர்

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில்

நாகை, ஜூன் 14-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் திருவிழந்தூரில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன் ஏற்பாட்டில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஞான. இமையநாதன் தலைமைத் தாங்கினார்.

மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ். செல்வமணி, மயிலாடுதுறை ஒன்றியக் கழகச் செயலாளர் பி.முருகமணி, பொதுக் குழு உறுப்பினர் பி.சிவதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவிழந்தூர் ஊராட்சி மன்ற துணை தலைவர் நேதாஜி வரவேற்றார்.

நிகழ்ச்சியில் திருவிழந்தூர் ஊராட்சி வேப்பங்குளம் அ.தி.மு.க. ஊராட்சி செயலாளர் ராமலிங்கம் தலைமையில் அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க., பா.ஜ.க., உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 800 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார். பின்னர் கழகத்தலைவர் தளபதி அவர்களின் உடன்பிறப்புகளாய் இணைவோம் என்ற அறிவிப்புக்கு இணங்க தி.மு.க. உறுப்பினர் சேர்த்தல் படிவத்தில் 800 பேரும் உறுப்பினர் படிவத்தில் கையொப்பம் இட்டனர்.

இந்நிகழச்சியில் மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் இராம.சேயோன், பெரு.வீரமணி, சௌமியன், ஒன்றியக் கழக அவைத்தலைவர் பன்னீர் செல்வம், துணைச் செயலாளர்கள் சந்திரவடிவம்ராஜா, பொருளாளர் மோகன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.கே.சரவணன், செல்வமணி, கலையரசன், உளுத்துகுப்பை ஊரட்சி மன்ற தலைவர் ராஜ்குமார் கிளை நிர்வாகிகள் துரைச்சந்திரன், சிவக்குமார், விஸ்வநாதன், அகோரமூர்த்தி, தமிழரசன், தங்கசாமி, அனுசியா, ரவி, தென்னரசு, மாரியப்பன், மரகதம், குணசேகரன், ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் அ.தி.மு.க.வில் இருந்து விலகி தி.மு.க.வில் இணைந்த ராமலிங்கம் நன்றி கூறினார்.

நமது முதலமைச்சரின் கேள்விக்கு அமித்ஷாவின் பதில் என்ன?

# தமிழ்நாடு முதலமைச்சர் கணிப்புப்படி நாற்பதும் நமதே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை,ஜீன் 14–

**தமிழ்நாட்டில் மக்களவைத் தேர்தலில் 25 இடங்களில் வெற்றி பெறுவோம் என்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. நாற்பதும் நமதே என்கிறார் நமது முதலமைச்சர். இது பெரியார் மண் யார் வரவேண்டும் என்பதைவிட, யார் வரக்கூடாது என்பதில் தமிழ்நாட்டு மக்கள் ஆயத்தமாக உள்ளனர் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:-**

தமிழ்நாட்டில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அரசியல் பிரிவான பா.ஜ.க. எப்படியாவது சில நாடாளுமன்றத் தொகுதிகளையாவது கைப்பற்றி விட வேண்டும் வருகிற 2024 இல் நடைபெறும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் என்று திட்டமிட்டு, தலைகீழ் பயிற்சிகளையும், ‘அரசியல் தண்டால்களையும்‘ அமித்ஷாக்கள், நட்டாக்கள், பிரதமர் மோடி முதலியவர்களும், அவரது ரத கஜ துரக பதாதிகளும் அவ்வப்பொழுது தமிழ்நாட்டிற்கு வந்து தி.மு.க.மீது அவதூறு பிரச்சாரத்தை அள்ளி வீசிவிட்டுச் செல்வதை ஒரு வேடிக்கையான அரசியல் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்!

சென்னை, வேலூருக்கு 11.6.2023 அன்று வந்து சென்ற (நம்பர் 2 வித்தை வித்தகரான) உள்துறைஅமைச்சர் அமித்ஷா, 25 நாடாளுமன்றத் தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற வியூகம் வகுத்துப் பேசி திரும்பி யுள்ளார்!

தென்சென்னை, வேலூர், குமரி, ஈரோடு, கோவை, இராமநாதபுரம், திருப்பூர் போன்ற பல நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறி வைத்து அங்கு ‘சகலவித வித்தைகளிலும்‘ ஈடுபட முடிவெடுத்துள்ளனர்!

அ.தி.மு.க.வினர் தங்களது ‘பல்லக்கு பவனி’க்குத் தேர்ந்தெடுப்பார்கள் எத்தனைப் பிரிவுகளும், பிளவுகளும் அவர்களுக்கு இருப்பினும், காரணம் வெளிப்படையானது ‘மடியில் கனம்‘ எனவே கூட்டணியில் பயம் என்ற நிலையில், அரசியல் கூட்டணி அடிமை ஒப்பந்தம் மீண்டும் மீண்டும் அவ்வப்போது அவர்களிடையே ஒவ்வொரு தேர்தலின்போதும் புதுப்பிக்கப்பட்டே வருவது கண்கூடு!

தெருக்கூத்தில்ராஜாவேஷம் கட்டுகிறவர்கள்; “ஊருக்கே உண்மை ராஜா தாம்தான்” என்று நினைத்துப் பேசினால், மக்கள் அத்தகையவர்களை எப்படி நோக்குவார்கள்?

அப்படித்தான் தமிழ்நாட்டு மக்கள் ‘மோடி வித்தை’க்காரர்களையும் பார்த்து ஒரு கேலிச் சிரிப்புடன் நகருகின்றனர்!

**கூட்டணி வேறு – கூத்தணி வேறு!**

‘நாற்பதும் நமதே!’ என்று முழங்குகிறார் ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கலைஞர் நூற்றாண்டு விழாவில் கூட்டணித் தலைவர்களோடு இணைந்து அவர்களது கோர்த்த கைகளுடன் கொண்டுள்ள பலமான கொள்கை உறவு பலத்துடன்!

அது போன்று இன்று தமிழ்நாட்டில் உள்ள



பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கூத்தணியினர் கூற முடியாததால்தான் 25 இடங்களைப் பிடிக்கவேண்டும் என்று அமித்ஷா பேசுகிறார்.

15 இடங்களை ‘பெரிய மனதுடன்’ மற்ற அ.தி.மு.க. போன்ற கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துள்ளார்!

இதற்கிடையில், ‘கருநாடகா வெற்றி வீரரான’ தமிழ்நாட்டு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, இப்போதே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று பகிரங்கமாய் அறிவித்துவிட்டார்! (அப்புறம் எப்படி ‘அரசியல் பல்டி அடிப்பாரோ’ என்பதும் யாருக்கும் தெரியாது).

தமிழ்நாட்டில் என்னென்ன புதிய திட்டங்களை பா.ஜ.க. அரசு தந்தது என்று சேலத்தில் கலைஞர் சிலை திறப்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்விக்கு இதோ நாங்கள் தந்த அடுக்கடுக்கான திட்டம் என்று பதில் கூறினார்களா? கூறுவார்களா? ஒன்றிய அரசின் மானிய வழங்கலைக் காட்டினால் போதுமா?

1. பல ஆண்டுகளுக்குமுன் பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப் பெற்ற மதுரை எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டனவா? அந்த மருத்துவக் கல்லூரி அங்கே அதில் இயங்குகிறதா? பதில் தருவார்களா?

2. சுமார் 1,800 கோடி ரூபாய் செலவில் தொடங்கி, தி.மு.க. அய்க்கிய முன்னணி அரசால் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 12 கிலோ மீட்டர் தூரமே பணிகள் இன்னும் மீதமுள்ள நிலையில், உச்சநீதிமன்றத்தில் (மூன்று பார்ப்பனர்கள் திட்டமிட்டு அத்திட்டம் தொடங்கி நடந்தால், அது தி.மு.க.விற்கு, அதன் கூட்டணி கட்சிகளுக்குக் குறிப்பாக காங்கிரசுக்குப் பெருமை ஏற்பட்டுவிடும் என்பதற்காக) தடையாணை பெற்று நிறுத்திய நிலை இன்று உண்மைகள் இராமர் பாலம் இருந்தது என்பதற்கு ஆதாரம் இல்லை என்று மோடி அரசின் மூத்த அமைச்சர் ஜிதேந்திர சிங் பதில் (நாடாளுமன்றத்தில்) மூலம் வெளியாகி, பொய்த் திரையை அவர்களே கிழித்து விட்டதற்குப் பிறகாவது, முன்பு அமைச்சர் நிதின் கட்காரி மக்களவையில் கொடுத்த உறுதிமொழி, “சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தை மீண்டும் எடுத்து செயல்படுத்த முனைவோம்“ என்ற வாக்குறுதி நடைமுறைக்கு வந்ததா?

அவ்வளவு தூரம் ஏன்?

செங்கற்பட்டு அருகில் ஒன்றிய அரசின் பல கோடி ரூபாய் செலவில் திட்டமிட்டு, நடத்தி மூடிய மருந்தியல் தொழிற்கூடத்தை கரோனா தொற்று காலகட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்குமுன் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சகம் மூலம் (ஆக்சிஜன் சிலிண்டர் தயாரிப்பு) நடத்திட மாநில அரசு வைத்த கோரிக்கை இன்னமும் கிடப்பில்தானே போடப்பட்டுள்ளது?

வெறும் வக்கணை வாய் ஜாலப் பேச்சு வித்தைக்கு மட்டும் பஞ்சமில்லை.

**இது பெரியார் மண் நினைவிருக்கட்டும்!**

தமிழ்நாட்டு மக்கள் வாயில் வடை சுட்டு விருந்தளிக்கும் இந்தக் காவிகளின் முகத்திரையைக் கழற்றி விட்டு கட்டிய டெபாசிட்டைக்கூட திரும்பப் பெற முடியாமல் தோல்வியைத் தரப் போவது உறுதி!

கருநாடகத்தில் செலவழித்ததைப்போல, பல மடங்கு செலவழித்தாலும், தமிழ் மண் ஒருபோதும் காவி மண்ணாகாது! இது சர்வமும் அறிந்த பெரியாரின் பகுத்தறிவு மண் புரிந்துகொள்வீர், வீண் கனவு காண வேண்டாம்!

25 இடங்கள் பிடிப்பது அப்புறம் இருக்கட்டும்; ஒரே ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் தனியே நின்று, பா.ஜ.க. அதன் பலத்தைக் காட்டிய பிறகு, அரசியல் முண்டா தட்டிக் காட்டட்டுமே!

இந்தியாவின் இதர மாநில வெற்றிகள் உள்பட இது வரை நடந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்த தேர்தல்களில் வாக்களித்தவர்கள் 40 சதவிகிதம் எதிராக வாக்களித்தவர்கள் 60 சதவிகிதம். அப்படியென்றால், அவர்களுக்கு வாக்களிக்காதவர்கள் தானே அதிகம்! வெற்றி பெற்றவர்களை விலைக்கு வாங்கும் அரசியல்தான்!

யார் வரக்கூடாது என்பதில் தமிழ்நாடு ஆயத்தமாகவே உள்ளது!

எனவே, ‘வித்தைகள்’மூலம் முன்பு வெற்றியைப் பெற்றார்கள். இப்போது அந்த வித்தைகள் செல்லாது இன்றைய 2,000 ரூபாய் நோட்டுகள்போல என்ற உண்மை, வெளியாவது உறுதி!

யார் வரக்கூடாது என்பதில் தமிழ்நாடு ஆயத்தமாகி நிற்கிறது!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக

# திட்டக்குழு உறுப்பினர் தேர்தலுக்கு போட்டியிடும் வேட்பாளர் விவரம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி மாவட்டத்திற்கான திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தல் 23.06.2023 அன்று நடைபெற உள்ளது. மேற்படி தேர்தலில் கீழ்காணும் கழகத்தினர்கள் மாவட்ட கவுன்சில் மற்றும் மாநகர, நகர, பேரூர், கவுன்சில், பகுதிகளுக்கான வேட்பாளர்களாக கீழ்க்கண்ட நபர்கள் போட்டியிடுவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

| வேட்பாளர்கள் | மாவட்ட திட்டக்குழு | வார்டு எண் |
|---|---|---|
| கே.பன்னீர்செல்வன் | மாநகராட்சி சார்பாக | மண்டலம் I மாநகராட்சி வார்டு எண் 12 |
| மு.ம.செல்வம் | நகராட்சி சார்பாக | மணப்பாறை நகராட்சி வார்டு எண் 7 |
| மயில்.பி.செல்வராஜ் | பேரூராட்சி சார்பாக | கூத்தைப்பார் பேரூராட்சி வார்டு எண் 15 |
| எஸ்.தேக்கமலர் | மாவட்ட குழு உறுப்பினர்கள் சார்பாக | வையம்பட்டி மாவட்ட ஊராட்சி வார்டு எண் 21 |

திருச்சி தெற்கு மாவட்டத்திற்கான ஊரக மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள் சார்பாக திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்பிற்கு போட்டியிடுவதற்கான திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கழக வேட்பாளர்களை மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, வார்டு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வெற்றிபெற செய்திட அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.**

செயலாளர்,

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டம், பல்லடம் ஒன்றியம், ஊஞ்சபாளையத்தில் கழக மூத்த முன்னோடிகள் இருவருக்கு ரூ 10,000 வீதம் ரூ 20,000 ரொக்க பணத்தினை மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் நா.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தாராபுரம் ஒன்றியம், தளவாய்பட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தை நல பரிசு பெட்டகத்தை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார். இதில் தாராபுரம் ஒன்றியக்குழுப் பெருந்தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார், நகரக் கழகச் செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் சு.முருகானந்தம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க.செல்வராஜ், நகர அவைத்தலைவர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

காஞ்சிபுரம் மாவட்டம்

**முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (MGSMT) (25% Component)**
**2022-23 மற்றும் 2023-24**
**கொள்முதலுக்கான மின்னணு முறையிலான**
**குறுகிய கால ஒப்பந்த அழைப்பு**
**ந/க/எண்: 1098-2023-அ9. நாள். 12/06/2023**

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்னும் இணையதள முகவரியை பார்வையிடவும்
2. காஞ்சிபுரம் - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை. திட்ட இயக்குநரால் முதல்வரின் கிராம சாலைகள்மேம்பாட்டுத்திட்டம் (MGSMT) (25% Component) 2022-23 மற்றும் 2023-24 ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக **13.06.2023 முதல் 27.06.2023** வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. நேரம் மற்றும் நாள்:

I. மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **27.06.2023 பி.ப. 3.00 மணி வரை.**

II. மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **27.06.2023 பி.ப. 4.00 மணி முதல்**

திட்ட இயக்குநர்.
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் மாவட்டம்.

செ.ம.தொ.இ/2982/ஒப்பந்தப்புள்ளி/2023

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.”